## சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – கல்வி – விடுதிகள் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு 2011–2012 ஆம் கல்வி ஆண்டுலிருந்து பள்ளி விடுதி மாணவ/மாணவியர்களுக்கு உணவுக் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.450/–லிருந்து ரூ.650/– ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு உணவுக் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.550/–லிருந்து ரூ.750/–ஆகவும் உயர்த்தி ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை

அரசாணை (நிலை) எண்.123

நாள். 5.12.2011
கார்த்திகை 19, திருவள்ளுவர் ஆண்டு 2042,
படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.127 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந4) துறை, நாள் 12.11.2008.
2. அரசாணை (நிலை) எண்.49 ஆதிதிராவிடர் மற்றும் பழங்கடியினர் நலத்துறை, நாள்.17.05.2010.
3. ஆதிதிராவிடர் நல ஆணையர்அவர்களின் கடித எண். த1/9681/2010, நாள் 25.02.2011 மற்றும் 09.06.2011.

-----

**ஆணை:-**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு உணவுக் கட்டணம் மாதம் ஒன்றுக்கு பள்ளி விடுதி மாணவ / மாணவி ஒருவருக்கு ரூ.400/–லிருந்து ரூ.450/– ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவி ஒருவருக்கு உணவுக் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.500/–லிருந்து ரூ.550/–ஆகவும் 2008–2009ஆம் ஆண்டு உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

2. பார்வை 3–ல் படிக்கப்பட்ட ஆதிதிராவிடர் நல ஆணையரின் செயற்குறிப்பில் இன்றைய சூழ்நிலையில் விடுதி மாணவ / மாணவியர்களுக்கு உணவு வழங்க பயன்படுத்தப்படும் அத்தியாவசியமான உணவுப் பொருட்களின் விலைகள் மிகவும் கடுமையாக உயர்ந்துள்ள காரணத்தால் தற்பொழுது நடைமுறையில் உள்ள கட்டணத்திற்குள் மாணவ / மாணவியர்களுக்கு சிறந்த உணவு வழங்க இயலாத சூழ்நிலை ஏற்படுவதாக தெரிவித்து விடுதி மாணவர் / மாணவியர் மற்றும் பல சங்கங்கள் விடுதி மாணவர் / மாணவியர்களுக்கான உணவுக் கட்டணத்தை உயர்த்தி வழங்க வேண்டுமாறு வலியுறுத்தி வந்ததன் அடிப்படையிலும் பள்ளி விடுதி மாணவர் / மாணவியர் மற்றும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் விடுதிகளில் தங்கி பயிலும் மாணவர் / மாணவியர்களுக்கான உணவு கட்டணம் மாதம் ஒன்றுக்கு 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாகவும், கல்லூரி விடுதி மாணவ / மாணவியருக்கு உணவுக் கட்டணம் மாதம் ஒன்றிற்கு 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும் உயர்த்தியும் மற்றும் விடுதி மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஒருங்கிணைக்கப்பட்ட உணவு பொருட்களின் வகைகளின் அளவுகளை

உயர்த்தப்பட உள்ள தொகைக்கு ஏற்றார் போல் மாற்றி அமைத்தும் அரசாணை வழங்குமாறு கோரியுள்ளார்.

3. இது தொடர்பாக 2011–12–ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு வெளியிட்டுள்ளார்கள் "ஆதிதிராவிட நல பள்ளி மாணவ / மாணவியருக்கு தற்பொழுது வழங்கப்படும் மாத உணவுப்படி 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாக உயர்த்தப்படும். இதே போன்று கல்லூரி மாணவ / மாணவியருக்கு வழங்கப்படும் உணவுப்படி 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாக உயர்த்தப்படும்."

4. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்து இத்துறையின் கீழ் இயங்கும் பள்ளி விடுதி மாணவ/மாணவியர் மற்றும் அரசு உதவி பெறும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் விடுதிகளில் தங்கி பயிலும் 5438 மாணவர் / மாணவியர்களுக்கான உணவுக் கட்டணத்தை நபர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.450/– லிருந்து ரூ.650/– (ரூபாய் அறுநூற்றி ஐம்பது மட்டும்) ஆகவும், கல்லூரி விடுதி மாணவ / மாணவியருக்கு உணவுக் கட்டணத்தை நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.550/– லிருந்து ரூ.750/–(ரூபாய் எழுநூற்று ஐம்பது மட்டும்) ஆகவும் உயர்த்தி வழங்க அனுமதியளித்தும், பள்ளி மற்றும் கல்லூரி விடுதி மாணவருக்கான உணவு வகைகளுக்கு தேவைப்படும் திருத்தப்பட்ட உணவு பொருட்களின் பட்டியலுக்கு அனுமதியளித்தும் (இணைப்பு I மற்றும் இணைப்பு II–ல் உள்ளவாறு) இக்கட்டண உயர்வினை இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைப்படுத்தவும் அரசு ஆணையிடுகிறது.

5. 2011–2012ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியொதுக்கத்தினை கொண்டு இச்செலவினை மேற்கொள்ள ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை / இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்.

6. மேலே, பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –01 ஆதிதிராவிடர் நலன் –277 கல்வி –I திட்டத்தில் சேராதது – AE மாணவரில்லங்கள் 67– உணவளிக்கும் /உணவுச் செலவுகள் –09 ஏனையவை .
(த.தொ.கு.எண்.2225 01 277AE 6792)

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –01 ஆதிதிராவிடர் நலன் –277 கல்வி –பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II மாநில திட்டம்–KD மாணவரில்லங்கள் –67– உணவளிக்கும்/உணவுச் செலவுகள் –09 ஏனையவை
(த.தொ.கு.எண்.2225 01 277 KD 6794)

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –01 ஆதிதிராவிடர் நலன் –277 கல்வி –பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II –மாநிலதிட்டம்– KE ஆதிதிராவிடர் நலபட்டமேற்படிப்பு மாணவரில்லத்தைத் தொடங்குதல்–67– உணவளிக்கும் /உணவுச் செலவுகள் –09 ஏனையவை .
(த.தொ.கு.எண்.2225 01 277 KE 6792)

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –02 பழங்குடியினர் நலன் –277 கல்வி –பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II மாநில திட்டம்– JU-பழங்குடியினர் மாணவர்களுக்காக அரசு மாணவரில்லங்களை ஏற்படுத்துதல் 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் –09 ஏனையவை.
(த.தொ.கு.எண்.2225 02 277 JU 6790)

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –02 பழங்குடியினர் நலன் –277 கல்வி I திட்டத்தில் சேராதது – AA பள்ளிகள்–67–உணவளிக்கும் / உணவுச் செலவுகள் –09 ஏனையவை.
(த.தொ.கு.எண்.2225 02 277 AA 6799)

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –02 பழங்குடியினர் நலன் –277 கல்வி –I- திட்டத்தில் சேராதது – AF பழங்குடியினர் மாணவரில்லங்களை பராமரித்தல்– 67– உணவளிக்கும் / உணவுச் செலவுகள் –09–ஏனையவை.
(த.தொ.கு.எண்.2225 02 277 AF 6799)

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –02 பழங்குடியினர் நலன் –277 கல்வி – II மாநிலத் திட்டம் JC மாணவரில்லம் இணைந்த பழங்குடியினர் பள்ளிகளைத் தொடங்குதலும், பராமரித்தலும்–67– உணவளிக்கும் / உணவுச் செலவுகள் 09–ஏனையவை.
(த.தொ.கு.எண்.2225 02 277 JC 6796)

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் 277 – கல்வி I திட்டத்தில் சேராதது AA பள்ளிக்கல்வி 09 உதவித் தொகை 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை
(த.தொ.கு 2225 01 277 AA 0938)

7. இச்செலவினத்திற்கான தொகையினை அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கு பகிர்ந்தளிக்க ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.76/DS(VS)/2011 நாள். 11.11.11 இசைவினைப் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. சு. ஜீவரத்தினம்
அரசு செயலாளர்

பெறுநர்
ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை5.
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்கள்.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35/6 (பெயரில்)
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–1.

<u>நகல்:</u>

நிதித்(பி.மி.பி/ஆதி(ம) பந) துறை, சென்னை–9.
நிதி (வ.செ.பொ I/(வ.செ.பொII)துறை, சென்னை–9.
நிதித் (BPE) துறை, சென்னை–9.
அமைச்சர் (ஆதிந) அவர்களின் முதுநிலை நேர்முக
உதவியாளர், சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்
துறையின் அனைத்துப் பிரிவுகள் சென்னை–9.
அனைத்து தொண்டு நிறுவன விடுதிகள்.
இருப்புக் கோப்பு/உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

தி. கர்ணல்யாணி 5/12/11
பிரிவு அலுவலர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் ஒரு மாணவன்/ மாணவிக்கு ஒரு மாதத்திற்கு வரையறுக்கப்படும் உணவுப் பொருட்களின் விவரம், இணைப்பு I

பள்ளி விடுதிகள்

| வ. எண். | உணவுப் பொருளின் விவரம் | பொருளின் அளவு ஒரு மாணவனுக்கு ஒரு மாதத்திற்கு. | ஒரு கிலோவிற்கான விலை. ரூ. | செலவினம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | அரிசி | 15 கிலோ | 1.00 | 15.00 |
| 2. | துவரம் பருப்பு | 500 கிராம் | 64.00 | 40.00 |
| 3. | கடலை பருப்பு | 200 கிராம் | 45.00 | 13.00 |
| 4. | உளுந்தம்பருப்பு | 250 கிராம் | 68.00 | 17.00 |
| 5. | பாசிப்பருப்பு. | 300 கிராம் | 70.00 | 21.00 |
| 6. | எண்ணெய் | 300 கிராம் | 70.00 | 21.00 |
| 7. | புளி | 250 கிராம் | 91.00 | 23.00 |
| 8. | மிளகாய் | 150 கிராம் | 113.00 | 17.00 |
| 9. | தனியா | 30 கிராம் | 70.00 | 2.00 |
| 10. | மஞ்சள்பொடி | 15 கிராம் | 100.00 | 2.00 |
| 11. | உப்பு | 500 கிராம் | 5.00 | 3.00 |
| 12. | கறிமசாலா | 5 ரூபாய் | 5.00 | 5.00 |
| 13. | மிளகு | 15 கிராம் | 250.00 | 4.00 |
| 14. | சீரகம் | 15 கிராம் | 180.00 | 3.00 |
| 15. | கடுகு | 15 கிராம் | 50.00 | 1.00 |
| 16. | பூண்டு | 15 கிராம் | 100.00 | 2.00 |
| 17. | காய்கறி, கருவேப்பிலை, இஞ்சி. பச்சைமிளகாய் மற்றும் மல்லிக்கீரை | 5 கிலோ. | 20.00 | 100.00 |
| 18. | தயிர் / பால் | 1.5 லிட்டர் | 26.00 | 39.00 |
| 19. | விறகு / எரிவாயு | | 350.00 | 75.00 |
| 20. | ஆட்டிறைச்சி | 160 கிராம் | 300.00 | 48.00 |
| 21. | கோழி இறைச்சி | 200 கிராம். | 120.00 | 25.00 |
| 22. | முட்டை | 12 எண்ணிக்கை | 3.00 | 36.00 |
| 23. | வெங்காயம் | 500 கிராம் | 20.00 | 10.00 |
| 24. | தக்காளி | 500 கிராம் | 20.00 | 10.00 |
| 25. | எலுமிச்சை | 5 எண்ணிக்கை | 1.00 | 5.00 |
| 26. | தேங்காய் | 1 எண்ணிக்கை | 5.00 | 5.00 |
| 27. | பெருங்காயம் | 10 கிராம் | (100 கி.)38.00 | 4.00 |
| 28. | ரவா | 250 கிராம் | 37.50 | 9.00 |
| 29. | டால்டா | 50 கிராம் | 70.00 | 4.00 |
| 30. | வெந்தயம் | 20 கிராம் | 60.00 | 1.00 |
| 31. | சோம்பு | 20 கிராம் | 65.00 | 1.00 |
| 32. | ஆப்பசோடா | 10 கிராம் | -- | 2.00 |
| 33. | வறுத்த பருப்பு. | 250 கிராம் | 50.00 | 25.00 |
| 34. | பட்டாணி | 50 கிராம் | 28.00 | 2.00 |
| 35. | சுண்டல் | 500 கிராமம் | 48.00 | 25.00 |
| 36. | சுக்குமல்லி/ கருப்புக்கட்டி/தேநீர் | 500 கிராமம் | 70.00 | 35.00 |
| | மொத்தம் | | | 650.00 |

ஏ. கா. கல்யாணி
பிரிவு அலுவலர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் ஒரு மாணவன்/ மாணவிக்கு ஒரு மாதத்திற்கு வரையறுக்கப்படும் உணவுப் பொருட்களின் விவரம்

கல்லூரி விடுதிகள் இணைப்பு II

| வ. எண். | உணவுப் பொருளின் விவரம் | பொருளின் அளவு ஒரு மாணவனுக்கு ஒரு மாதத்திற்கு. | ஒரு கிலோவிற்கான விலை. ரூ. | செலவினம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | அரிசி | 18 கிலோ | 1.00 | 18.00 |
| 2. | துவரம் பருப்பு | 750 கிராம் | 64.00 | 48.00 |
| 3. | கடலை பருப்பு | 400 கிராம் | 45.00 | 18.00 |
| 4. | உளுத்தம்பருப்பு | 300 கிராம் | 68.00 | 20.00 |
| 5. | பாசிப்பருப்பு. | 500 கிராம் | 70.00 | 35.00 |
| 6. | எண்ணெய் | 500 கிராம் | 70.00 | 35.00 |
| 7. | புளி | 300 கிராம் | 91.00 | 27.00 |
| 8. | மிளகாய் | 200 கிராம் | 113.00 | 22.00 |
| 9. | தனியா | 50 கிராம் | 70.00 | 3.00 |
| 10. | மஞ்சள்பொடி | 20 கிராம் | 100.00 | 2.00 |
| 11. | உப்பு | 600 கிராம் | 5.00 | 3.00 |
| 12. | கறிமசாலா | 5 ரூபாய் | 5.00 | 5.00 |
| 13. | மிளகு | 20 கிராம் | 250.00 | 5.00 |
| 14. | சீரகம் | 20 கிராம் | 180.00 | 4.00 |
| 15. | கடுகு | 20 கிராம் | 50.00 | 1.00 |
| 16. | பூண்டு | 20 கிராம் | 100.00 | 2.00 |
| 17. | காய்கறி, கருவேப்பிலை, இஞ்சி. பச்சைமிளகாய் மற்றும் மல்லிக்கீரை | 6 கிலோ. | 20.00 | 120.00 |
| 18. | தயிர் / பால் | 1.5 லிட்டர் | 26.00 | 39.00 |
| 19. | விறகு / எரிவாயு | | 350.00 | 88.00 |
| 20. | ஆட்டிறைச்சி | 160 கிராம் | 300.00 | 48.00 |
| 21. | கோழி இறைச்சி | 240 கிராம். | 120.00 | 29.00 |
| 22. | முட்டை | 12 எண்ணிக்கை | 3.00 | 36.00 |
| 23. | வெங்காயம் | 500 கிராம் | 40.00 | 10.00 |
| 24. | தக்காளி | 500 கிராம் | 20.00 | 10.00 |
| 25. | எலுமிச்சை | 5 எண்ணிக்கை | 1.00 | 5.00 |
| 26. | தேங்காய் | 1 எண்ணிக்கை | 5.00 | 5.00 |
| 27. | பெருங்காயம் | 10 கிராம் | (100 கி.)38.00 | 4.00 |
| 28. | ரவா | 300 கிராம் | 37.50 | 12.00 |
| 29. | டால்டா | 50 கிராம் | 70.00 | 4.00 |
| 30. | வெந்தயம் | 20 கிராம் | 60.00 | 1.00 |
| 31. | சோம்பு | 20 கிராம் | 65.00 | 1.00 |
| 32. | ஆப்பசோடா | 10 கிராம் | --- | 2.00 |
| 33. | வறுத்த பருப்பு. | 500 கிராம் | 50.00 | 25.00 |
| 34. | பட்டாணி | 100 கிராம் | 28.00 | 3.00 |
| 35. | சுண்டல் | 500 கிராம் | 48.00 | 25.00 |
| 36. | சுக்குமல்லி/ கருப்புக்கட்டி/தேநீர் | 500 கிராம் | 70.00 | 35.00 |
| | மொத்தம் | | | 750.00 |

சி.கா.கல்யாணி
பிரிவு அலுவலர்